# ‘சர்வதேச வர்த்தக விதிகள் புதுப்பிக்கப்பட வேண்டும்’

பெங்களூரு, ஏப். 11: சர்வதேச வர்த்தக விதிகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்காவின் கன்சாஸ் சட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ்பாலா தெரிவித்தார்.

பெங்களூரு, சிஎம்ஆர் சட்டப் பல்கலைக்கழகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பசிப்பிக் பிராந்தியத்தில் வர்த்தகத்தில் சந்தித்து வரும் பிரச்னைகள், சவால்கள் குறித்து கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் பேசியதாவது:

பசிப்பிக் பிராந்தியத்தின் வர்த்தகத்தில் இந்தியா, ஜப்பான், சீன நாடுகளின் கைகள் ஓங்கியுள்ளன. என்றாலும் இந்த பிராந்தியத்தில் நடைபெறும் வர்த்தகத்தில் பல்வேறு பிரச்னைகள், சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு சர்வதேச வர்த்தக விதிகள் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சர்வதேச வர்த்தம் தொடர்பாக நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் மனித உரிமை, பெண்களுக்கு சம வாய்ப்பு உள்ளிட்டவை முக்கியமாக இடம்பெறுகின்றன.

கரோனா தொற்றுப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 21-ஆவது நூற்றாண்டில் வர்த்தகத்தில் பல்வேறு சவால்களை எதிர்க்கொள்ள வேண்டியுள்ளது. கரோனா தொற்றையடுத்து உலக அளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.8 சதவீதமாகக் குறைந்துள்ளது. என்றாலும் எதிர்காலத்தில் இதிலிருந்து இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீண்டும் வரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது என்றார்.